2021

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண். 79/மா/2021

நாள் 29.01.2022

திரு. D. குமார்,
கோயம்புத்தூர். ... முறையீட்டு மனுதாரர்

1. ஆணையர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்.

2. உதவி ஆணையர்,
வடக்கு மண்டலம்,
கோயம்புத்தூர் மாநகராட்சி. ... எதிர்மனுதாரர்கள்

கோயம்புத்தூர் மாநகராட்சி, கணபதி மாநகர் எண்.13 என்ற முகவரியில் வசிக்கும் திரு. D. குமார் என்பவரின் 7.8.2021 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 23.8.2021ல் பெறப்பட்டு 79/மா/2021 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரது மனு பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

கோயம்புத்தூர் மாநகராட்சி, கணபதி மாநகர் எண்.13 என்ற முகவரியில் வசிக்கும் திரு. D. குமார் என்பவர் தன்னுடைய 7.8.2021 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

"நான் கோவை மாநகரம் வார்டு எண்.41-ற்குள் அடங்கிய கணபதி மாநகர் என்ற பகுதியில் வசிக்கின்றேன். இங்கே இந்த பகுதியில் 1400-ற்கும் மேற்பட்ட வீடுகள் உள்ளடக்கிய Block -1,2,3 & 4 என்ற நான்கு Block-கள் உள்ளடக்கிய பகுதிதான் கணபதி மாநகர் என்பதாகும். இப்பகுதி Tamilnadu Housing Board நிறுவனத்தாரால் கட்டப்பட்ட வீடுகள் தான் இந்த 1400 ஆகும்.

இந்த 1400 வீடுகளுக்குமே முறையான சாக்கடை வசதி உள்ளிட்ட அனைத்துமே மேற்படி தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் மிகவும் நேர்த்தியாக, அழகாக, பொருத்தமாகவும் வடிவமைத்து கொடுத்திருக்கிறார்கள். கட்டியது என்னவோ 1998-2000

ஆண்டுகளானாலும் இன்றளவும் பெரிய பாதிப்புகள் இல்லாமலும், சுகாதாரகேடுகள் என்று சொல்லிக்கொள்ளும்படி எந்தவித புகாரும் இல்லாமல் இருந்து வந்தது. ஆயினும், சிறு சிறு இடங்களில் சாக்கடையின் உள்பகுதி மற்றும் பக்க சுவர் போன்றவை சற்று விரிசல் ஏற்பட்டிருந்தது. சில இடங்களில் மண் போன்றவை மூடி சாக்கடை அடைபட்டு கிடந்திருந்தது. ஆனாலும். எங்கேயும் நீர் தேங்கியோ அல்லது கொசுத் தொல்லையோ இல்லாமல் இருந்து வந்தது.

இந்த சூழ்நிலையில் கடந்த 2019-ல் புதிதாக சாக்கடை கட்டப்போகிறோம் என்ற போர்வையில் ஒரு Group வந்தது. 50-ற்கும் மேற்பட்ட நபர்கள் வந்திறங்கினர். கூடவே Bull dozer, பொக்லைன் போன்ற கருவிகளை கொண்டு வந்தனர். அடுத்த நாள், ஏற்கனவே இருந்து வந்த சாக்கடைகளை அடித்து உடைத்தனர். Bull Dozar, பொக்லைன் போன்ற கருவிகளை கொண்டு தாறுமாறாக சாக்கடைகளை பெயர்த்து எரிந்தனர். குடியிருப்போர் அங்கங்கே வீட்டு வாசலில் வைத்திருக்கும் செடி கொடிகள் மற்றும் Gardens போன்றவை பெயர்த்து தூக்கி எரியப்பட்டன. என்ன ஏதென்று அறிவதற்குள் அந்த இடத்தை நாசம் செய்து விட்டனர். அதாவது அந்த பகுதியையே நாசப்படுத்திவிட்டனர்.

யார் இவர்கள்... எதற்காக வந்தார்கள், இவர்களை அனுப்பியது யார்... எந்த துறையில் பணி மேற்கொள்ளப்படுகிறது போன்ற எந்த விவரமும் இங்கு குடியிருக்கும் மக்களுக்கு தெரியாது. தெறியப்படுத்தவுமில்லை. கூடவே, எந்த அதிகாரியும் உடனிருக்கவுமில்லை. அதிகாரி ஒருவரிடம் தொடர்புகொண்டு கேட்ட போது (ward AE) ஆம், அங்கே சாக்கடை கட்டுமான பணி நடக்கிறது என்ற வார்த்தையை மட்டுமே சொல்லி துண்டித்து கொண்டார்.

4 அடி ஆழம், 3 அடி அகலம். ஆம் இதுதான் சாக்கடை கட்டி முடித்த நீள அகலம், (width and depth) 6 மாத காலம் அந்த வேலை முடிக்க (இடையிடையே அந்த வேலை நிறுத்தப்பட்டது) மக்களை சொல்லொன்னா துன்பத்தில் அழ வைத்துவிட்டனர்.

1. கட்டப்பட்ட சாக்கடை எந்த விதத்திலும் தேவையை கருத்தில் கொண்டு செயல்படுத்தவில்லை (தேவையேயில்லை).
2. ஏற்கனவே இருந்த சாக்கடை காட்டிலும் 10 மடங்கு அல்லது 15 மடங்கு அதிகப்படுத்தி கட்டியது கொடுமையிலும் கொடுமை.
3. இவ்வளவு பெரிய ஆழம் இந்த அளவிற்கு அகலம் இதையெல்லாம் எதன் அடிப்படையாக கொண்டு முடிவெடுத்தது... ? யாரால் முடிவெடுத்தது... ?
4. ஏற்கனவே இருக்கும் சாக்கடையை சீர்படுத்தி செப்பனிடச் செய்து சரிசெய்ய வாய்ப்பிருந்தும் அதை சிந்திக்காமல் இதனை செய்து யாரால் நிறைவேற்றப் பட்டது ?
5. சாக்கடை வேண்டும் என்று யாரால் கோரப்பட்டது அல்லது எந்த புகாரின் பெயரில் அந்த முடிவு எடுக்கப்பட்டது.
6. ஒவ்வொரு வீட்டிலும் வாசல் பகுதியில் Cement Slap கூட போடாமல் அப்படியே வேலையை முடித்துக் கொண்டு ஒதுங்கியது எந்த விதத்தில் அறிவுபூர்வமானது ?
7. எல்லாவற்றிலும் முக்கியமாக, இந்த இடத்தில் இந்த சாக்கடையை எந்த இடத்திலும் வடிகால் முறையே இல்லாமல் அமைய வைத்தது எந்த அறிவு ஜீவியால் ?

8. சாலையில் நடப்போர், குடியிருப்போர் போன்றவர்களுக்கு இச்சாக்கடையின் ஆழமான திறந்த வெளியின் பாதுகாப்பற்ற சூழ்நிலையை ஏற்படுத்தும் என்று சிந்திக்காத அறிவு ஜீவி யார்... ?
   கொசு மற்றும் மலேரியா போன்ற ஆபத்துக்கள் இச்சாக்கடையில் தேங்கியிருக்கும் நீரால் வராதா? என சுகாதார துறையால் கருத்து கோரப்பட்டதா... ?
9. மாநகராட்சியின் பணம் நாசம்... மக்களின் பாதுகாப்பும் நாசம். இது தான் இந்த புகாரின் மொத்த வடிவம்.

இது குறித்து மாநகராட்சிக்கு கடந்த 10.05.2021ல் மனு கொடுத்திருந்தேன். இதுவரை எந்த நடவடிக்கையுமில்லை. எவரும் வந்து எட்டிப்பார்க்கவில்லை என தெரிவித்துள்ளார்.

2) முறையீட்டு மனுதாரர் மற்றும் ஆணையரின் பிரதிநிதி மற்றும் உதவி ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி ஆகியோரை 1.12.2021 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 22.11.2021 நாளிட்ட அழைப்பானை அனுப்பப்பட்டது.

மனுதாரர் 1.12.2021 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

"கோயம்புத்தூர் மாநகராட்சி, வார்டு எண்.41, கணபதி மாநகர் என்கின்ற பகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்ட வீடுகள் அமைந்துள்ளன. மேற்கண்ட வீடுகளுக்கு முன்பாக சாக்கடை உள்ளது. மூன்று அடி ஆழம் கொண்டு இச்சாக்கடை திறந்த நிலையில் அபாயகரமாக உள்ளது. மேலும், இதில் விபத்துகளும் ஏற்படுகின்றன. மேலும், இச்சாக்கடை நீரால், கொசுக்கள் உற்பத்தியாகி மக்களுக்கு சுகாதார கேட்டினை விளைவிக்கிறது. மேலும், மேற்கண்ட சாக்கடையை சுத்தம் செய்யாததால், பல ஆண்டுகளாக சேறும் சகதியும் நிறைந்து வருகிறது. எனவே, கணபதி மாநகரில் அமைந்துள்ள திறந்தவெளி சாக்கடைகளை சிலாப் கொண்டு மூடுவதற்கும், அதில் உள்ள சகதிகளை மாநகராட்சி அகற்றிட உரிய ஆணை பிறப்பித்திட இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். மேலும், அச்சாக்கடையில் ஓடும் கழிவு நீர் எங்கு சென்றடைகின்றன என்கின்ற விவரமும் என்னால் அறியமுடியவில்லை என்பதையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நேர்வு தொடர்பான புகைப்படங்களின் நகல்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பித்துக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

3) கோயம்புத்தூர் மாநகராட்சியில் உதவி பொறியாளராகப் பணிபுரியும் திரு. செ. இளங்கோவன் 1.12.2021 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார்.

"மனுதாரர் குறிப்பிட்டுள்ள கோயம்புத்தூர் மாநகராட்சி கணபதி மாநகரில் பிளாக் ஒன்றிற்கு ரூபாய் 75 லட்சம் வீதம் 4 பிளாக்குகளில் மாநகராட்சி பொது நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு. 3 பிளாக்குகளில் பணிகள் முடிவடைந்துள்ளன. தற்போது இன்னும் 1 பிளாக்கில் பணிகள் நடைபெற்று வருகின்றன. மனுதாரர் திரு. குமார் தட்சிணா மூர்த்தி தனது மனுவில் தெரிவித்துள்ள பகுதியும் இதில் அடங்கும். மேற்கண்ட மனுதாரர் தனது மனுவில் கேட்டுக்கொண்டவாறு அவர் குறிப்பிட்ட இடத்தில்

சிலாப் அமைக்கும் பணி கோயம்புத்தூர் மாநகராட்சியால் விரைவில் முடிக்கப்படும் என்கின்ற விவரத்தையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேற்கண்ட சாக்கடையில் (Storm water drain) ஓடும் நீர் விநாயகபுரம் வழியாக விளாங்குறிச்சி ரோட்டில் உள்ள கால்வாயில் சென்றடைகின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

4) கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் தனது 15.11.2021 நாளிடப்பட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் வார்டு எண்.41க்குட்பட்ட கணபதி மாநகர், பிளாக் 1 முதல் பிளாக் 4 வரை உள்ள பகுதிகள் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் உருவாக்கப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது. 2005-ஆம் ஆண்டில் மாநகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டது.

மேற்கண்ட பகுதி தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் LP/DTCP No.623/1993ன் படி உள்ளூர் திட்டக்குழுமத்தால் மனைப்பிரிவு வரைபட அனுமதி பெற்று உருவாக்கப்பட்டதாகும்.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் 1993 ஆம் ஆண்டு கட்டப்பட்ட மழை நீர் வடிகால் பழுதடைந்து ஒவ்வொரு பிளாக்கிலும் தண்ணீர் தேங்கி நிற்கும் சூழ்நிலையில் இருந்து வந்தது.

மேலும், இப்பகுதியில் குடிநீரில் அசுத்த நீர் கலந்து வந்ததை சீரமைப்பதற்காக குடிநீர் பிரதான குழாய் மற்றும் வீட்டு உபயோக குழாய் புதியதாக பதிக்கப்பட்டதால் ஏற்பட்ட பழுதடைந்த சாலையை சீரமைக்க வேண்டிய நிலையிலும், கணபதி மாநகர் வீட்டு வசதி பாதுகாப்பு சங்கத்தினர் மூலம் சிதிலடைந்த மழை நீர் வடிகால் மற்றும் சாலைகளை செப்பனிட்டு தரக்கோரி மாநகராட்சி ஆணையாளர், மாவட்ட ஆட்சித்தலைவர் மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் தமிழக அரசு உயர் அதிகாரிகளுக்கு 2016ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து மனுக்கள் அனுப்பப்பட்டன. இதன் அடிப்படையில் வடக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மற்றும் மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் மேற்படி பகுதியில் நேரடி கள ஆய்வு செய்து மழை நீர் வடிகால் அமைக்க மதிப்பீடுகள் தயாரிக்க உத்தரவிடப்பட்டது.

இதனை தொடர்ந்து உரிய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு கோயம்புத்தூர் மாநகராட்சி மாமன்றத்தில் 06.01.2020ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு 26.06.2020ல் ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு ஒப்பந்ததாரருக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

1993ல் உருவாக்கப்பட்ட கணபதி மாநகர் பகுதி 1296 மனையிடங்களுக்கானது. தற்போது விளாங்குறிச்சி சாலை பிரதான சாலையாக நிலவி வரும் நிலையில் ஏற்கனவே பழுதடைந்த நிலையிலிருந்த வடிகாலை இடித்து அப்புறப்படுத்தி புதிதாக கட்டப்படும் வடிகால் சத்தி சாலையில் இருந்து மழைநீர் செல்ல தேவையான வாட்டத்துடன் கிடைமட்டத்தை இணைப்பு செய்ய வேண்டி உள்ளது. மேலும், புதியதாக ஏற்படுத்தப்பட்ட மனை பிரிவுகளில் கட்டப்பட்ட வடிகால் இணைக்கப்பட வேண்டிய நிலையை கருத்திற்கொண்டு பிரதான சாலையில் தேவையான ஆழ அகலத்துடன் பிரதான மழை நீர்

வடிகால் கட்டப்பட்டது. மேலும், சாலையின் உயரத்துக்கு இணையாக புதிய மழை நீர் வடிகால் அமைக்கப்பட்டுள்ளது.

திரு. D. குமார் அவர்கள் மனுவிற்கு, புதியதாக கட்டப்பட்ட மழைநீர் வடிகாலுக்கு மூடுபலகை (covering slab) அமைக்க வரும் நிதியாண்டுகளில் தேவையான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு உரிய ஒப்புதல் பெற்று பணி மேற்கொள்ளப்படும் என 20.07.2021ம் தேதியில் உதவி ஆணையாளர், வடக்கு மண்டலம் அவர்கள் மூலம் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

எனவே கணபதி மாநகர் வீட்டு உரிமையாளர் நலப்பாதுகாப்பு சங்கம் (பிளாக் -1 முதல் பிளாக்-4) விண்ணப்பித்ததின் அடிப்படையிலும் மேலும் பொது மக்கள் பலமுறை கேட்டுக்கொண்டதன் அடிப்படையிலும் குடிநீர் பிரதான குழாய், வீட்டு பகீர்மான குடிநீர் குழாய், சாலை சீரமைப்பு மற்றும் மழை நீர் வடிகால் புதுப்பித்தல் போன்ற அடிப்படை வசதிகள் மேற்கொள்ள தேவையான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு உரிய ஒப்புதல் பெறப்பட்ட பின்னரே உயரதிகாரிகளின் ஆலோசனையின் படி தேவையான ஆழம் மற்றும் அகலத்திற்கு பிரதான மழை நீர் வடிகால் கட்டுமான பணி செய்யப்பட்டது என தெரிவித்துள்ளார்.

5) முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம், கோவை மாநகராட்சி உதவி பொறியாளரின் வாக்குமூலம் மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

இந்நேர்வில் கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர் தனது 15.11.2021 நாளிட்ட அறிக்கையில் கணபதி மாநகர் வீட்டு வசதி பாதுகாப்பு சங்கத்தினர் மூலம் சிதிலடைந்த மழைநீர் வடிகால் மற்றும் சாலைகளை செப்பனிட்டு தரக்கோரி மாநகராட்சி ஆணையாளர், மாவட்ட ஆட்சித்தலைவர், அமைச்சர்கள் மற்றும் தமிழக அரசு உயர் அதிகாரிகளுக்கு 2016 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து மனுக்கள் அனுப்பி உள்ளதாக தெரிவித்துள்ளார். ஆனால் தற்போது மனுதாரர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திடம் முறையிட்ட பின்னர்தான் மனுதாரரின் குற்றச்சாட்டுக்களுக்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக இந்த முறைமன்ற நடுவம் கருதுகிறது. கிட்டத்தட்ட சுமார் 5 ஆண்டுகள் காலதாமதாக நடவடிக்கை எடுக்காமலிருந்த சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கைகளை எடுக்க மாநகராட்சி ஆணையருக்கு பரிந்துரைத்து இந்த முறை மன்ற நடுவம் ஆணையிடுகிறது.

இந்நேர்வில் சாக்கடையில் (Storm water drain) ஓடும் நீர் விநாயகபுரம் வழியாக விளாங்குறிச்சி ரோட்டில் உள்ள கால்வாயில் சென்றடைகின்ற விவரத்தை, கோயம்புத்தூர் மாநகராட்சி உதவிபொறியாளர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்திருப்பதை அறிய முடிகிறது.

மேலும் மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ள குறைபாடுகளான வீடுகளுக்கு முன்பாக உள்ள திறந்தவெளி சாக்கடைகளை சிலாப் கொண்டு மூடுதல், பல ஆண்டுகளாக சேறும் சகதியும் நிறைந்த சாக்கடைகளை சுத்தம் செய்தல், மற்றும் சாக்கடை நீரால் கொசுக்கள் உற்பத்தியாகி மக்களுக்கு சுகாதார சீர்கேடு உண்டாகாமல் தடுத்தல், போன்ற குறைபாடுகளை கோயம்புத்தூர் மாநகராட்சி உதவிபொறியாளர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறு உடனடியாக விரைந்து செயல்பட்டு மேற்படி குறைபாடுகளை களைந்திட மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. மேலும்

இந்நேர்வில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை மனுதாரருக்கும் தெரிவிக்க வேண்டும் என கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையரை இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்துகிறது.

2022-ஆம் ஆண்டு, ஜனவரி திங்கள் 29– ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. D. குமார்,
   13, கணபதி மாநகர்,
   கோயம்புத்தூர்-641 006.
2. ஆணையர்,
   கோயம்புத்தூர் மாநகராட்சி,
   கோயம்புத்தூர்.
3. உதவி ஆணையர்,
   வடக்கு மண்டலம்,
   கோயம்புத்தூர் மாநகராட்சி,
   பாப்பநாயக்கன் பாளையம்,
   கோயம்புத்தூர் - 641 037.
4. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை – 600 028.
5. இணை இயக்குநர்,
   ஒருங்கிணைப்பாளர், (Nodal Officer),
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை – 600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்,

இ.கோ. / உதிரிகள்

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

செயலாளருக்காக